www.tamilarangam.net

# அருந்ததி ஏன் போராளி ஆனான்?

படைப்பும், படைப்பாளியும் எங்கிருந்து வருகின்றான்?
சுவரிலிருந்து ஓவியம்.
காலத்திலிருந்து காவியம்.
வரலாற்றிலிருந்து பகைப்புலம்.
ஈழத்து அகதி வரலாற்றுப் பகைப்புலத்தின் கொப்பளிப்பு "முகம்".

கடலுக்கும் கரைகளுண்டு.
நிலவுக்கும், உலாவவும், உறங்கவும் வானமுண்டு.
எந்தக்கலைஞனுக்கும் காலம் விதிக்கும் எல்லைகளுண்டு.....!
அருந்ததி ஏன் போராளி ஆனான்?

கடந்த காலங்களில் அருந்ததி பதித்த இலக்கியச் சுவடுகள், கனதியானவை. பிரான்ஸ் புகலிட இலக்கியம் அருந்ததியைக் கடந்து, இதுவரை எதையும் பதிவுசெய்யவில்லை. தமிழ்ச் சினிமாச் சுவடு பதித்த சோக வரலாற்றின் கசப்பான அனுபவங்கள்..... முகம் என்னும் காயை நகர்த்த அருந்ததியை உந்தியுள்ளது. புகலிடம் தாண்டட்டும்.....

நவீன தமிழ்ச்சினிமா உலகம், விஞ்ஞான தொழில் நுட்பத்துடன், தனது கரங்களை விரித்து, சமூகத்துடன் கொஞ்சிக் குலாவும்போது, அதன் உட்புகுந்து போர்க்களமாக்க அருந்ததி ஏன் போராளி ஆனான்!!!

எமக்குள் போராட, வாளை உருவியவன், ஏன் சென்னையைப் போருக்கழைக்கும் சர்வாதிகாரியானான்?!!!

நாம் கெஞ்சிக்கேட்டும் கிடைக்காமல், எமது தனித்துவம், அரசியல், பொருளாதார சமூக வாழ்வு, தொடர்ந்தும் உதாசீனப்படுத்தப்பட்டதால்தானே நாங்கள்.....!

எமது புகிலிடச்சமூகம், அதன் அமைப்புச்சார்ந்த பிரத்தியேகமான சமூகவாழ்வை, தனது, தான் வாழும் தேசத்து அமைவு, வாழும் மக்கள், இனம், மொழி, சூழ்நிலை என்பவற்றுக்கூடாக எழுந்து தன்னை முகம்காட்டவில்லை.

எம்மைப்புரிதலே வாழ்நிலையில் எத்தனையோ இடர்களையும், பல்வேறு சோதனைகளையும், தாண்ட உத்தியாக அமையும். எம்மைப்புரியாத படைப்புகளும் எமது வாழ்நிலை, எமது சூழல், எமது மக்கள், சமூகம், தவிர்ந்த "அபகரிப்பும்"!

சமூகம், பொருள் உள்ளடக்கம் தவிர்ந்த தனிக்குழுக்களை திருப்திப்படுத்துவதன், ஊடாகவும், எந்தச் சமூகத்தாலும் கலை, இலக்கியத்தை சுவை, நயம்பட நிறுவிட முடியாது. புகலிட இலக்கிய எதிர்பார்ப்பு பல வருடங்களாக, எல்லைகள் தாண்டிப் பரவாமல், ஊழித்தாண்டவம் ஆடியதால்தானே, அருந்ததி போராளி ஆனான்!!!

செலயற்றுக்கிடந்த புலன்கள் அனைத்தும், இயங்கவைக்க வெண்திரையில் முகங்களை அள்ளி வீசினான்.

"புகலிட இலக்கியத்திற்கு ஓர் அறைகூவல்."
"யுத்தம் கொடூரமானது"
நவீன இலக்கிய வாசலை அகலத்திறந்து, சொல்லும், சுவையும், பொருளும் போக்கும், புதிதாய் உருப்பெற பேசித்தீருங்கள்.

"யுத்தம் கொடூரமானது"
உருவிய வாளை அருந்ததி மீண்டும் உறையினுள் சொருகிட, பயன்பெறும் கருத்துக்களை, பேசித்தீருங்கள். மீண்டும், மீண்டும் மறுக்கப்படுமாயின்.....!
வரலாற்று விசை, மீண்டும் முகங்களை திரையினுள் அப்பும்.

வெளியீடு,
முகம்பார்த்து, முகம் இழந்தவர்கள்.
France.